# 2024 டிசம்பர் 18ஆந் திகதியின் சபை அலுவல்கள்

**திகதி :** 2024-12-18

கௌரவ (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன, சபாநாயகர் அவர்கள் தலைமை வகித்தார்கள்.

## புதிய உறுப்பினர்களின் உறுதிப்பிரமாணம் அல்லது சத்தியப்பிரமாணம்

கௌரவ மொஹமட் நிசாம் காரியப்பர் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராக கௌரவ சபாநாயகர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

## சபாநாயகரின் அறிவித்தல்கள்

A : பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் பணியாற்றவுள்ள உறுப்பினர்கள்
B : அரசாங்க நிதி பற்றிய குழுவில் பணியாற்றவுள்ள உறுப்பினர்கள்

## பத்திரங்கள் சமர்ப்பித்தல்

(i) 1974 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க மற்றும் 1988 ஆம் ஆண்டின் 83 ஆம் இலக்க சுங்க (திருத்தச்) சட்டங்களினாலும் சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (235 ஆம் அத்தியாயமான) 19(அ) ஆம் பிரிவின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மீதான சுங்கத் தீர்வை சுங்க தொடர்பில் அப்போதைய நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2024 செப்தெம்பர் 09 ஆம் திகதிய 2401/02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை
(ii) 2021/2022 ஆம் ஆண்டுக்கான வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனியின் ஆண்டறிக்கை
(iii) 2023 ஆம் ஆண்டுக்கான நீர்ப்பாசன அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
(iv) 2020/2021 ஆம் ஆண்டுக்கான மாந்தை உப்பு லிமிற்றெட்டின் ஆண்டறிக்கையும் கணக்குகளும்
(v) 2022 ஆம் ஆண்டுக்கான தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வருடாந்த அறிக்கை
(vi) 2023 ஆம் ஆண்டுக்கான தொழில் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

## பாராளுமன்ற நிலையியற் கட்டளை 27(2) இன் கீழான வினாக்கள்

கௌரவ (டாக்டர்) இராமநாதன் அர்ச்சுனா

யாழ்.போதனா வைத்தியசாலையில் தற்காலிக பணியாளர்கள் தொடர்பான பிரச்சினைகள்

## இன்றைய தினத்திற்கான சபையின் பிரதான அலுவல்கள்

**குறைநிரப்புத் தொகை - செலவினத் தலைப்பு 102 - நிகழ்ச்சித்திட்டம் 01** (இன்றைய ஒழுங்குப் பத்திரத்தில் 1 ஆம் இலக்க விடயம்)

சபையால் அங்கீகரிக்கப்பட்டது.

**ஒத்திவைப்பு நேரத்தின் போதான கேள்விகள்**

பின்வரும் பாராளுமன்ற உறுப்பினரினால் வினாவொன்று கேட்கப்பட்டது:-

கௌரவ அமில பிரசாத்

அதனையடுத்து, 1817 மணியளவில் பாராளுமன்றமானது 2025 ஜனவரி 7ஆம் திகதி செவ்வாய்க்கிழமை 0930 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

* இது ஒரு திருத்தப்படாத பதிப்பாகும். இத்தினத்தின் அலுவல்களின் அதிகார அறிக்கைக்காக தயவுசெய்து ஹன்சாட் அறிக்கையைப் பார்க்கவும்.